100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி வழங்க மறுக்கும் ஒன்றிய அரசை கண்டித்து சென்னை

# வடகிழக்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தலைமை கழக அறிவிப்பின்படி 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் தமிழ்நாட்டின் மூலம் தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய ரூபாய் 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பாசிச பாஜக அரசை கண்டித்து திமு கழகம் சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் 29.03.2025 சனிக்கிழமை அன்று ஒரு ஒன்றியத்தில் இரண்டு இடங்களில் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட வேண்டும் என்று தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புழல் ஒன்றியம் சோழவரம் ஒன்றியம் வில்லிவாக்கம் ஒன்றியம் ஆகியவற்றில் நடைபெற உள்ள ஆர்ப்பாட்ட விவரம் வருமாறு:

| வ. எண் | கழக நிர்வாகம் | பொறுப்பின் பெயர் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1 | புழல் ஒன்றியம் | C.அற்புதராஜ் புழல் ஒன்றிய கழக செயலாளர் | வடகரை அண்ணாசிலை எதிரில் |
| 2 | | | தீர்த்தகிரையம்பட்டு அண்ணாசிலை அருகில் |
| 3 | சோழவரம் ஒன்றியம் | மீ.வே.கருணாகரன் சோழவரம் ஒன்றிய செயலாளர் | M.A.நகர் மார்கெட் அருகில் |
| 4 | | | காரனோடை பஜார் மார்க்கெட் அருகில் |
| 5 | வில்லிவாக்கம் ஒன்றியம் | G.தயாளன் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் | மோரை ஊராட்சி வீராபுரம் பஸ் நிலையம், VAO அலுவலகம் |
| 6 | | | பம்மதுகுளம் ஊராட்சி கோணிமேடு சந்திப்பு |

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

ரவுண்டானா முதல் டோல்கேட் வரை

# மாதவரத்தில் உயர் மட்ட மேம்பாலம் கட்டப்பட வேண்டும்!

## பேரவையில் எஸ்.சுதர்சனம் வலியுறுத்தல்!

*சென்னை, மார்ச் 28 -*

மாதவரம் ரவுண்டானா முதல் சோழவரம் டோல் கேட் வரை உயர் மட்ட மேம்பாலம் கட்டப்பட வேண்டும் என்று பேரவையில் எஸ்.சுதர்சனம் வலியுறுத்தினார்.

பேரவையில் இது தொடர்பான வினா விடை வருமாறு:-

**எஸ். சுதர்சனம்:** மாதவரம் தொகுதிக்குட்பட்ட, மாதவரம் roundtana முதல் சோழவரம் tollgate வரை elevated bridge கட்டப்படும் என்று, அதற்காக DPR, ரூ.1,900 கோடி நிதி ஆகியவை ஒதுக்கப்பட்டு தயார்நிலையில் இருக்கிறது. ஒன்றிய அரசினுடைய நிபந்தனை என்னவென்றால், அதற்கு அரசாங்கம் விதிக்கின்ற TNGST வரியை தவிர்த்துவிட்டால், நாங்கள் தர தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இதுகுறித்து அமைச்சர் அவர்களை நாங்கள் சந்தித்தோம். ஆனால், இது ஒன்றுக்காக வரியை விட்டுக்கொடுத்தால், எல்லாவற்றிலும் அவர்கள் இதே நிலையை எடுப்பார்கள் என்ற காரணத்தினால் அது அப்படியே இருக்கிறது. தயவு செய்து, முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் ஒன்றிய அரசிடமும், சம்பந்தப்பட்ட அமைச்சரிடமும் பேசி, elevated மேம்பாலத்தைப் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதிகமான தொழிற்பேட்டைகள் வருவதனால், தினந்தினம் ஓர் இடத்தை கடப்பதற்கு ஒன்றரை மணி நேரம் ஆகிறது. எனவே, அதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எ.வ.வேலு:** ஒன்றிய அரசாங்கத்தைப் பொறுத்தளவில், தமிழ்நாட்டில் பல DPRகள் தயார் செய்யப்பட்டுள்ளன. ஆனால், அவையெல்லாம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்று சொன்னால், ஒன்றன்பின் ஒன்றாகத்தான் நடைமுறைப்படுத்துகிறார்கள். நாமும் தொடர்ந்து கடிதங்கள் எழுதிக் கொண்டுதான் இருக்கிறோம். திரு. சுதர்சனம் அவர்கள் சொல்வதை நானும் அறிந்தவன்தான். எனவே, அதற்கு முக்கியத்துவம் தந்து, இந்த ஆண்டு, மீண்டும் அதை வலியுறுத்தி, இந்த ஆண்டே அது தொடங்கப்படுமா என்பதை அவரைக் கேட்டுதான் சொல்ல வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சியை நாங்கள் எடுப்போம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. தலைமையில் மு.ராசா எம்.சி - கே.கண்ணன் எம்.சி. முன்னிலை!

# விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 3000 நபர்களுக்கு புனித ரமலான் தொகுப்பு!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

*சென்னை, மார்ச். 28*

சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 3000 நபர்களுக்கு புனித ரமலான் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர்கள் மு.ராசா எம்.சி, கே.கண்ணன் எம்.சி. ஆகியோர் முன்னிலையில், மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கி சிறப்பிக்கிறார்.

கலைஞர் நகர் தெற்குப் பகுதிக்கு உட்பட்ட டாக்டர் காணு நகர் பகுதியில் இன்று (28.03.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, பள்ளிவாசல் அருகிலும்,

கலைஞர் நகர் வடக்குப் பகுதியில் நாளை (29.03.2025 சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு, ஷேக் அப்துல்லா நகர் மற்றும் சாதிக் பாஷா நகரிலும், மாலை 06:00 மணிக்கு, கலைஞர் நகர் வடக்குப் பகுதி, சாலிகிராமம் மஜித் நகர் பகுதியிலும்,

(30.03.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை கோயம்பேடு 1 வது செட்டார், குலசேகரபுரம் ஜெய் நகர் மற்றும் சேமாத்தம்மன் நகர், 3 வது செக்டார் பள்ளிவாசல் அருகிலும் பொதுமக்களுக்கு புனித ரமலான் தொகுப்பு வழங்கப்படுகிறது.

இந்நிகழ்வில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், கணக்கு நிலைக்குழு தலைவர் க.தனசேகரன், மாநில வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ். முருகேசன், மாமன்ற உறுப்பினர்கள் பொன்.வர.லோகு, ரத்னா லோகேஸ்வரன், நிளவரசி துரைராஜ்,

வட்டக் கழகச் செயலாளர்கள் வழக்கறிஞர் வீ.ஏ.ராஜா, மு.கோவிந்தராஜன், எஸ்.மைக்கேல், பழக்கடை பாஸ்கர், தஞ்சை பாபு, பூக்கடை பழனிச்சாமி, இரா.செழியன், பி.கே. குமார், அ.கதிரேசன், வழக்கறிஞர் சதீஷ் கண்ணன், சோ.செந்தில்குமார், ஜம்பு முருகன், பகுதிக் கழக நிர்வாகிகள் வாட்டர் விஜயகுமார், சா.நாகராஜன், பி.விஜயலட்சுமி, து.ரஜித்குமார், எஸ்.உமாபதி, அஜந்தா ரவி, பெ.தியாகு, அ.பாபு, மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம்.விநாயகமூர்த்தி, ச.சங்கர் கணேஷ் ஆர். கிருஷ்ணகுமார், ஜெ.இ. பாண்டியன், கா.வீ.தியாகராஜன், ராமாபுரம் செ.ரவி, கோட்டூர் எஸ்.பிரகாஷ் மற்றும் மாவட்ட சிறுபான்மை அணி தலைவர் எஸ். அபுபக்கர் பகுதி இளைஞரணி அமைப்பாளர்கள், ந.மணிகண்டன் சி.எச். தினேஷ், மற்றும் தலைமைக் கழக, மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞரணி சகோதரர்கள் உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்கின்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட வர்த்தக அணி

# அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல் தாயார் ஜெ.ஜோதி திருவுருவப்படம்!

## அமைச்சர் ஆவடி சாமு.நாசர் திறந்து வைக்கிறார்!

*திருவள்ளூர் மார்ச் 28;*

திருவள்ளூர் மத்திய மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல் தாயார் ஜெ.ஜோதி அவர்களின் திருவுருவ படத்திறப்பு விழா நாளை 29-3-2025 சனிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு திருவேற்காடு கீழ் அயனம்பாக்கத்தில் உள்ள இல்லத்தில் நடைபெறுகிறது நகரச் செயலாளர் என்.இ.கே. மூர்த்தி , மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் பொதுக் குழு உறுப்பினர் எஸ்.சங்கர் முன்னிலை வகிக்கிறார்கள்



இந் நிகழ்வில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சாமு.நாசர் தலைமை தாங்கி திருவுருவப்படத்தை திறந்து வைத்து மரியாதை செலுத்துகிறார்

இதில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் சி.ஜெரால்டு, மா.இராஜ், சி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், பொதுக் குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல் வர்ஷன், எம். முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், மற்றும் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் திருவேற்காடு நகரக் கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கிளைக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்

ஆ.சத்தியவேலுதலைமையில் கழகத் தலைவர் பிறந்தநாள் முன்னிட்டு

# எல்லாபுரம் தெற்கு ஒன்றியத்தில் பொதுக் கூட்டம் - 1000 பேருக்கு நல உதவிகள்!

## எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் வழங்கினார்! டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ பங்கேற்பு!

*திருவள்ளூர் மார்ச் 28*

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், எல்லாபுரம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் திருக்கண்டலம் கிராமத்தில் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய செயலாளர் ஆ.சத்திய வேலு தலைமையில் நடைபெற்றது

கழக நிர்வாகிகள் கே.எஸ். எம்.குப்பன், தியாகராஜன், மதன்(எ) சத்யராஜ் வரவேற்றார்கள் . தலைமை செயற்குழு உறுப்பினர் வடக்கு ஒன்றிய செயலாளர் பிஜெ. மூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் மாவட்ட துணை செயலாளர்கள் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி எம்.எல்,ரவி, மு.கதிரவன், மாவட்ட பொருளாளர் எஸ்.ரமேஷ், ஒன்றிய அவைத் தலைவர் டிகே.முனிவேல், ஒன்றிய துணை செயலாளர்கள் உதயசூரியன், அன்பு உதயகுமார், ராஜேஷ்வரி, மாவட்ட பிரதிநிதிகள் வெங்கடாசலம், கண்ணபிரான், தனியாச்சலம், ஆனந்தன், இளங்கோவன், துகாரமேஷ், பழனி , எழில் ராஜ், குமார் , ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்கள் . நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், கும்மிடிப்பூண்டி எம்எல்ஏ டி ஜெ . கோ வி ந் த ரா ஜ ன் தலைமை கழக பேச்சாளர் வாசு.கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் உறுதிமொழி ஏற்று வருகின்ற 29ஆம் தேதி தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய அரசை கண்டித்து திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஒன்றியங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட வேண்டும் என இந்த ஆர்ப்பாட்டங்களில் அனைத்து நில பொறுப்பாளர்கள் கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட பொறுப்பாளர் ரமேஷ் ராஜ் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கப்பட்டது. இதில் மாவட்ட,ஒன்றிய நிர்வாகிகள் முன்னாள் எம்எல்ஏ சேகர், வெ.அன்புவாணன், ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், மூக்கையன், வீர மணிகண்டன், சுரேஷ் மாவட்ட, ஒன்றிய,நகரம் பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் என திரளான கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் சாம் கமலேசன், விஜயகுமார் நன்றி கூறினார்

மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமையில்

# மயிலாடுதுறை மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

மயிலாடுதுறை மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் பொறியாளர் அணிக்கு மயிலாடுதுறை மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : 30.03.2025 (ஞாயிற்றுக்கிழமை), நேரம் : காலை 10.00 மணிக்கு
இடம் : மாவட்ட கழக அலுவலகம் (கோர்ட் எதிரில்) மயிலாடுதுறை.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர், தி.மு.க. பொறியாளர் அணி

100 நாள் வேலை உறுதித் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு தரவேண்டிய
ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய பா,ஜ.க. அரசைக் கண்டித்து

# மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒன்றியங்கள் தோறும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



100 நாள் வேலை உறுதித் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் ஒன்றியங்கள் தோறும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமைக் கழக அறிவுறுத்தல்படி மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒன்றியங்கள் தோறும் கீழ்கண்ட இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அதன்படி கீழ்க்கண்ட இடங்களில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய , நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழகத்தினர் அதிக அளவில் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய வேண்டுகிறேன்.

| ஒன்றியம் | நடைபெறும் இடம் |
|---|---|
| மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் | நீடூர் அஞ்சல் அலுவலகம் முன் |
| மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் | பட்டமங்கலம் ஊராட்சி சீனிவாசபுரத்தில் ஐ.ஓ.பீ. வங்கி முன் |
| மயிலாடுதுறை மேற்கு ஒன்றியம் | த்தர்காடு கடை வீதியில் உள்ள எஸ்.பி.ஐ. வங்கி முன் |
| மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் | திருவளாளப்புத்தூரில் அஞ்சல் அலுவலகம் முன் |
| செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம் | பரசலூர் பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன் |
| செம்பனார்காயில் மத்திய ஒன்றியம் | திருக்கடையூர் அஞ்சல் அலுவலகம் முன் |
| செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியம் | திருக்களாச்சேரியில் ஐ.ஓ.பீ. வங்கி |
| குத்தாலம் வடக்கு ஒன்றியம் | தேரழுந்தூர் கடைத் தெரு |
| குத்தாலம் கிழக்கு ஒன்றியம் | மங்கைநல்லூர் கடைத்தெருவில் அஞ்சல் அலுவலகம் முன் |
| குத்தாலம் மேற்கு ஒன்றியம் | ஸ்ரீகண்டபுரம் கடைவீதி |
| கொள்ளிடம் கிழக்கு ஒன்றியம் | கடவாசல் அஞ்சல் அலுவலகம் முன் |
| கொள்ளிடம் மேற்கு ஒன்றியம் | திருவெண்காடு எஸ்.பி.ஐ. வங்கி முன் |
| சீர்காழி கிழக்கு ஒன்றியம் | திருவெண்காடு எஸ்.பி.ஐ. வங்கி முன் |
| சீர்காழி மேற்கு ஒன்றியம் | வைத்தீஸ்வரன்கோயில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முன் |

குறிப்பு ஆர்ப்பாட்ட ஏற்பாடுகளை ஒன்றிய கழகச் செயலாளர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திட வேண்டும்

**நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.**
செயலாளர், மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.

100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு!



கடந்த நான்கரை மாதங்களாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட (MGNREGA) நிதி ரூ.4034 கோடியை தமிழ்நாட்டிற்கு வழங்காமல் - தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க தி.மு.க. சார்பில் நாளை 29.3.2025 சனிக்கிழமை அன்று காலை அனைத்து கழக ஒன்றியங்களிலும் தலா இரண்டு அனுமதிக்கப்பட்ட இடங்களில் 100 நாள் வேலைவாய்ப்பால் பயன்பெறுவோரைத் திரட்டி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என்ற அறிவிப்புக்கிணங்க

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கடம்பத்தூர் கிழக்கு மேற்கு திருவலாங்காடு கிழக்கு மேற்கு பூண்டி மேற்கு திருத்தணி கிழக்கு மேற்கு ஆர்கே பேட்டை கிழக்கு மேற்கு பள்ளிப்பட்டு வடக்கு தெற்கு மத்திய ஆகிய ஒன்றியங்களில் இரண்டு இடங்களை தேர்வு செய்து ஒன்றிய கழகச்செயலாளர்கள் தலைமையில் ஒன்றிய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்திட வேண்டும் இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் சம்பந்தப்பட்ட ஒன்றிய நிர்வாகத்துடன் இணைந்து கண்டன பொதுக்கூட்டத்தில் பங்கேற்று மோடி அரசுக்கு எதிரான கண்டனம் முழுக்கங்களை எழுப்ப வேண்டும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



கழகத் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு எல்லாபுரம் தெற்கு ஒன்றியத்தில் ஆ.சத்தியவேலு தலைமையில் நடைபெற்ற் பொதுக் கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் 1000 பேருக்கு நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.